**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.85/2018 | Date | : 28.01.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**. 6 | Taluk | : |
| Name | : **ஜெகன்மோகன்** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.01.2026

**(சாட்சி காணொலி மூலம் சாட்சியம் அளிக்கிறார்)**

(3ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 2ம் எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். 1 மற்றும் 2ம் எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் கடந்த 2016 ஆம் வருடம் பவானி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து ஓய்வு பெற்று, தற்போது குமாரபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 29.06.2015 ஆம் தேதி இரவு 07.30 மணி அளவில் பவானி அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்த போது, அஞ்சலிதேவி க/பெ. பிரபு, வயது 30 என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த நான்கு நபர்கள் கையாளும், கடப்பாரையாளும் சுமார் மாலை 04.15 மணியளவில் தன் வீட்டின் அருகில் காயப்படுத்தியதாக என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு இடது கால் தொடையின் பின்புறம் 5x2 செ.மீ அளவில் கரு நீல நிறத்தில் கன்றிய காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்கண்ட காயம் சாதாரண காயம் என்று கருத்து கூறி விபத்து பதிவேட்டு நகல் மற்றும் காயச் சான்றிதழ் வழங்கினேன்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச்சான்றிதழ் நான் வழங்கியது தான். **(விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ 2 ஆகவும் காயசான்றிதழ் அ.த.சா.ஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக சித்தோடு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி நபருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பொதுவாக இரும்பு ராடால் ஒரு நபரை அடிக்கும்போது அவருக்கு எலும்புமுறிவு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் அது அடிக்கும் வேகத்தை பொருத்தது. ஒரு நபர் தன்னிச்சையாக கீழே விழும்போது மேற்கண்டவாறு காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.01.28 17:25:38 -0800

Judicial Magistrate No.III,

Erode.